**இரண்டாம்ஆண்டு - மூன்றாம்பருவம்**

**பாடக்குறியீட்டு எண் - 731T**

**பொதுத்தமிழ் தாள் -3 காப்பியமும் புதினமும்**

**அலகு - 1 செய்யுள்பகுதி**

**1.சிலப்பதிகாரம் - மங்கலவாழ்த்துப்பாடல்**

**சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.இதன் காலம் கி.பி 2 ஆம் நூற்றாண்டாகும்.இந்நூலில் 5001 அடிகளும் மூன்று காண்டங்களும் 30 காதைகளும் அமைந்துள்ளன.இதில் மூன்று உண்மைகள் கூறப்பட்டுள்ளன.**

**கடவுள் வாழ்த்து**

**சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்தாக இயற்கைச்செல்வங்களாகிய சந்திரன், சூரியன்,மழை ஆகியவற்றை வாழ்த்திய பின்னர் பூம்புகார் நகரத்தையும் வாழ்த்தினார்.பின்னர் நகரத்தின் சிறப்பும் கோவலன், கண்ணகிஆகியோர் திருமணத்தைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.இப்பகுதியில் 70 வரிகள் உள்ளன.இக்காதை 4 துணைத்தலைப்புக்களில் இடம்பெற்றுள்ளன.**

**கண்ணகி மற்றும் கோவலனை உரைத்தல்,கோவலன் கண்ணகி ஆகிய இருவருக்கும் திருமணம் நிகழ்தல்,கோவலன் கண்ணகி ஆகிய மணமக்களை வாழ்த்துதல்**

**2.மணிமேகலை - பாத்திர மரபு கூறிய காதை**

**சிலப்பதிகாரத்தை ஒட்டித் தமிழுக்குக் கிடைத்தமற்றொரு காப்பியம் மணிமேகலை. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்டது.**

அமுதசுரபி என்னும் தெய்வீ கப்பாத்திரம் ஆபுத்திரனுக்குக் கிடைத்ததனை அறவணடிகள் சொல்லும் பகுதி இது. அந்தப்பாத்திரத்தினால் ஆபுத்திரன் செய்த தர்ம மும்,இந்திரனால் அவன் தன்னுயிரையே;நீத்துக்கொள்ள

நேரிட்டதைப்பற்றியும் இந்த பாத்திர மரபு கூறிய காதையில் கூறப்பட்டுள்ளது.

1. ஆபுத்திரனின் அருந்துயரம்
2. மழைக்காலத்து நள்ளிரவில் வழியிடைத்துன்பம் அடைந்தவர்கள்கடுமையான பசியுடன் அம்பலத்துக்கு வந்தனர். வயிறு காய்கின்ற பெரும்பசி எம்மை வருந்துகின்றது என்றனர்.அவர்களுடைய பசியைத்தீர்ப்பதற்கு வழியறியாதவனாய் மிகுதியான மனவேதனைஅடைந்தான் அவனுக்கு சிந்தாதேவியின் அருள் கிடைத்தது. சிந்தாதேவியை ஆபுத்திரன் போற்றி வணங்கினான் அவ்விடத்து உணவு கேட்டவர்களின் பசித்துயரை உடனே போக்கினான்.
3. இந்திரன் வந்தான் நீ அடையவிரும்பும் பெரும்பயனைப் பெற்றுக்கொள்வாயாக என்றான்.நும் பேச்சினை யான் இகழ்கின்றேன்.நீர் போவீராக என்று எடுத்துக்கூறினான்.இதனால் இந்திரன் சினம் அடைந்தான் மேகங்களை ஏவி மழையைப் பெய்வித்து பாண்டியநாட்டை செல்வ வளமிக்க நாடாக்கினான்
   4.பீடிகை நிலைமை  உணவு உண்ணலாகிய ஒலியினது ஆரவாரம்ஒடுங்கிப்போனதாயிற்று.இதனால் ஆபுத்திரன் அம்பலப்பீடிகை விட்டு வெளியேறினான்.சாவகநாடு செல்லும் மக்களோடு கலம் ஏறினான்.மரக்கலம் அவனைத் தனியே மணிபல்லவத்தே விட்டுப்போய் விட்ட பின்னர் ஆபுத்திரன் மிகுதியான துயரம் அடைந்தான். இனி இந்தப்பாத்திரத்தால் என்ன பயன் என்று கருதி கோமுகிப்பொய்கையில் விட்டு விட்டான்.பின்னர் உண்ணா நோன்பிருந்து உயிரை விட்டான்கம்பராமாயணம் - சேதுபந்தனப்படலம்

வடமொழியில் வாழ்மீகி முனிவர் இயற்றிய இராமாயணத்தைத் தமிழில் கம்பர் இராமகாதை என்ற பெயரில் இயற்றினார்.யுத்தகாண்டத்தில் ஏழாவது

படலம் சேதுபந்தனப்படலம் தன்படைகளோடு இராமன் இலங்கை சேறுமாறு கடலில் சேதுவைக்கட்டினமையைத் தெரிவிக்கும் படலமாகும்.

நளன் வானர ர்களைக் கொணர்ந்து உதவ, நளன் மூன்று தினங்களில் கட்டிச

முடித்தான்.

4.பெரியபுராணம் - கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்

இதன் ஆசிரியர் சேக்கிழார். பெரியபுராணம் 4286 பாடல்களையும், 2காண்டங்களையும், 13 சருக்கங்களையும் கொண்டது.

விருத்தப்பாவால் ஆன நூல். சமணத்தின்பால் ஈடுபாடு கொண்ட மன்னனின்மனதை சைவத்தின் மீது திருப்பவே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார்.

திருவானைக்காவல் என்னும் ஊரில் அழகிய சோலைகளின் நடுவில் உள்ள சிவலிங்கப்பெருமானை வெள்ளானை ஒன்று தினமும் துதித்துக்கொண்டிருந்தது. அந்த சிவலிங்கத்தின் மேலே சிலந்தி ஒன்று சருகுகள் சிவலிங்கத்தின் மீது விழாமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வலை பின்னியது.இதனை வெள்ளானை அழித்துவிடமீண்டும் கட்டியது.மீண்டும் வெள்ளானை அவ்வாறே செய்ய சினம் கொண்ட சிலந்தி வெள்ளானையின் துதிக்கையில் நுழைந்து விட யானை இறந்ததுசிவபெருமானின் அருளால் சிலந்தி மருபிறவி எடுத்தது.

5.தேம்பாவணி - கோலியாத் படலம்

இயற்றியவர் வீரமாமுனிவர்.இவர் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்.தேம்பாவணி மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும்3615 பாடல்களையும் கொண்டது.தேம்பாவணி என்பது தேன் போன்ற இனிய அழகிய பாக்களால் அமைந்த நூல் வாடாத மாலை என்றும்பொருள் கொள்ளப்படுகிறது.

கோலியாத் படலம்.

தேம்பாவணி நூலில் மூன்றாவது படலமான வளன் சனித்த படலத்தில் எருசலேம் நகரினை ஆண்ட தாவீது மன்னனின் சிறுவயதில் கோலியாத் என்னும் பகைவரை வீழ்த்தியதைப் பற்றி இந்த கோலியாத் படலம் விவரிக்கிறது. தாவீது மன்னனின் பெருமையினை மண்ணுலகமும் வானுலகமும் வாழ்த்தியது.

கோலியாற்றின் அறைகூவல் என்னுடன் பக்கத்தில் ஒருவனாக தனித்து நின்று தாக்க.எம்முள் தோற்றவன் பக்கத்தார்க்கு அடிமைகள்

என்று ஆக க்கடவர். ஆரவார மகிழ்ச்சியால் நகைத்து இகழ்ச்சி சொல்லி அறைகூவி அழைப்பான்.

தாவீதின் வீரவுரை கையின் வலிமையினால்,உடல் வலிமையிலும் மேலாகஉள்ளத்தில் ஓங்கி எழும் பொய்யான வலிமையைக் கொண்டுள்ள ஒருவன் சினத்தினால் புகைந்து பேசிய சொல்லுக்கு அஞ்சுவது ஏனோ? உடலின் வலிமையினால் மட்டும் ஒருவனுக்கு விரும்பிய வெற்றி கிட்டுவதோ? தரும் வலிமையினால் சிறுவனாகிய நானுமே அவனை வெல்லுவேன் என்றான்.கோலியாத்தின் வீழ்ச்சி தாவிதன் கல்லைக் கவணில் ஏற்றியதையும் கவணைச் சுழற்றியதையும் ஒருவருமே கண்டுகொள்ளவில்லை. இடிக்கும்மேகம் போன்று அந்தக்கல் அவன் நெற்றியில் பாய்ந்ததையும்,பகலவன் பாய்ந்து வர இருள் நீங்கியது போல் அவன் விழுந்ததையும் மட்டுமே எல்லோரும் கண்டனர்

6.சீறாப்புராணம் - மானுக்குப்பிணை நின்ற படலம்.

இதனை இயற்றியவர் உமறுப்புலவர்.இது 5027 பாடல்களையும் 3காண்டங்களையும் உடையது. நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றைப்பேசுகிறது.இவரை ஆதரித்தவர் வள்ளல் சீதக்காதி ஆவார்.இப்பகுதி நபிகள் நாயகம் வேடனிடத்தில் மானிற்குப் பிணையாக நின்றதன் வரலாற்றைக் கூறும்படலம்.

காட்டிலுள்ள மிருகங்களைக் கொன்று அதன் மாமிசத்தை அருந்துபவன் வேறு ஒரு அறிவும் இல்லாதவன். ஒரு நாள் ஒரு மானைக் கோபத்துடன் தனது வலையின்கண் சேர்த்துக்கட்டி வைத்திருப்பதைத் தங்களின் கண்களினால் பார்த்தார்கள் மான் தன்னுடைய துன்பமான நிகழ்வை நபிகள் நாயகத்திடம் கூறியது.அதனைக் கேட்ட நபிகள் நாயகம் வேடனிடம் இந்த மானிற்காக நான் பிணையாக இருக்கின்றேன்.என்று கூறினார்.உடனே வேடன் மானிடரிடத்தில் அகப்பட்ட மான் தன் இனத்தாரிடம் சேர்ந்த பிறகு மீண்டும் மனிதரிடம் திரும்புமா? என்ற வினாவை எழுப்பினான் அதற்கு நபிகள்பெருமான் அவர்கள் நீ கட்டவிழ்த்து விட்டால் அது காட்டிற்குப் போய் தன் குட்டியைப் பார்த்துவிட்டு வரும் போது ஒன்றிற்கு இரண்டாக வரும்என்கிறார்.அவ்வாறே கட்டவிழ்த்து விடுகின்றான் மான் காட்டிற்குப் போய் தன் இனத்தையும் குட்டியையும் பார்த்து விட்டுத்திரும்பும் போது இரண்டாக வேடன் இருக்கும் இடத்திற்கு வருகிறது இதனைப் பார்த்தவேடன் வியப்புறுகின்றான்.உடனே நபிகள் நமது பிணையைத்

தள்ளி உனது பசியைத்தீர்த்துக்கொள் என்கின்றார்.உடனே அவன். நான் சொர்க்கலோகத்தைப் பெற்று மேன்மையுற்று வாழ்வதேனென்று சொல்லி அந்நபிகள் பெருமானின் தாமரை மலரையொத்த திருவடிகளில் வீழ்ந்தான்.

அலகு - 2 வேரில்பழுத்த பலா

சு. சமுத்திரத்தின் சாகித்திய அகாடமி விருது பெற்ற வேரில் பழுத்த பலா என்னும் நாவலானது இரண்டு குறுநாவல்களாக இரு தலைப்புக்களில் அமைந்துள்ளது.அதில் முதல் குறுநாவலான வேரில்பழுத்த பலா எனும்நாவலில் ஸ்டேசனரிப்பொருட்களை கான்டிராக்ட் எடுத்து அனுப்பும் அரசு நிறுவனத்தில் ஏற்படும் ஊழலைப் பற்றியும். இரண்டாவது குறுநாவலான ஓரு நாள் போதுமா? எனும் நாவலில் கட்டிடத்தொழிலாளர்களின் வாழ்வில் ஏற்படும் இன்னல்கலைப் பற்றியும்,அவர்களின் இறப்புக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்காமல் அடிமைத்தனம் செய்யும் காண்டிராக்டர்களைப் பற்றியும்,அவர்களை எதிர்த்துப் போராடும் மக்களின் நிலையையும் கூறுகிறது.

அலகு - 3 இலக்கணம் யாப்பும் அணியும்

செய்யுள் உறுப்புகள் -எழுத்து,அசை,சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புகளைக் கொண்டு செய்யப்படுவது செய்யுள் ஆகும்.

எழுத்து

அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள்

1.குறில் 2.நெடில் 3.ஆவி 4.குற்றியலுகரம் 5.குற்றியலிகரம் 6.ஐகாரக்குறுக்கம் 7.ஆய்தம் 8.மெய் 9.வல்லினம் 10. மெல்லினம் 11.இடையினம்12.உயிர்மெய்

13.அளபெடை

அசை

எழுத்துக்கள் சேர்ந்து அசை ஆகின்றது.ஒரு சொல் அல்லது சீரைச் சொல்லும் போது குறில், நெடில் ஒற்று என்னும் மூவகை எழுத்துக்களால் அமைக்கப்படுவது அசை எனப்படும்.

அசை இரண்டு வகைப்படும்

அவை 1.நேரசை 2. நிரையசை என்பனவாகும்.

நேரசை

குற்றெழுத்து தனித்து வருதல் - க

நெட்டெழுத்து தனித்து வருதல் - கா

குறிலும் ஒற்றும் சேர்ந்து வருதல் - கல்

நெடிலும் ஒற்றும் சேர்ந்து வருதல் - கால்

நிரையசை

இரு குறில் இணைந்து வருதல் - பல

குறில் நெடில் இணைந்து வருதல் -பலா

இரு குறில் ஒற்றுப் பெற்று வருதல் - படம்

குறில் நெடிலுடன் ஒற்றுப்பெற்று வருதல் -படாம்

சீர்

ஓர் அசை தனியாகவோ பல அசைகள் சேர்ந்தோ ஓர்ஒழுங்குபடச் செய்யுள் அடிகளில் அமைவது சீர் எனப்படும்.

சீர் நான்கு வகைப்படும் 1. ஓரசைச்சீர் 2.ஈரசைச்சீர் 3.மூவசைச்சீர் 4 நாலசைச்சீர் என்பனவாகும்.

தளை

தளை என்ற சொல்லுக்கு கட்டுவது அல்லது பொருந்துவது என்பது பொருளாகும்.

ஒன்றிய தளைகள் நான்கு ஒன்றாத தளைகள் மூன்று மொத்தம் 7 வகைப்படும்.

அடி

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டசீர்கள் தொடர்ந்து நிற்பது அடி எனக்கூறப்படுகிறது. 1.குறளடி 2.சிந்தடி3.அளவடி 4ீ நெடிலடி 5.கழிநெடிலடி

தொடை

மலர்களைத் தொடுப்பது போலவேசீர்களிலும் அடிகளிலும் ஒன்றையொன்று தொடுத்துச் செல்லும் அமைப்பினைத் தொடை என்பர்.

பாவகை 1 வெண்பா 2. ஆசிரியப்பா 3.கலிப்பா 4.வஞ்சிப்பா 5.மருட்பா எனப் பெரும் பிரிவில் பாக்கள் ஐந்தாகப்பகுக்கப்பட்டுள்ளன.

அணியிலக்கணம்

அணி என்னும் சொல்லுக்கு அலகு என்பது பொருள்.

அணி வகைகள் தமிழில் மொத்தம்35 வகை அணிகள் உள்ளன.இவற்றில் 5அணி பாடத்திட்டத்தில்இடம்பெற்றுள்ளன.

1. உவமைஅணி 2.உருவக அணி 3.வேற்றுமை அணி4பின்வரு நிலையணி 5.சிலேடையணி

அலகு - 4 இலக்கிய வரலாறு
ஐம்பெருங்காப்பியங்கள்,ஐஞ்சிறுகாப்பியங்கள்.இரட்டைக்காப்பியங்கள்வைணவக்காப்பியங்கள் கம்பராமாயணம், சைவப்புராணங்கள், பெரியபுராணம், கிறித்தவக்காப்பியங்கள்,தேம்பாவணி, இசுலாமியக்காப்பியங்கள்,சீறாப்புராணம்.

அலகு -5 மரபுக் கவிதை, புதுக்கவிதை எழுதுதல்

மரபு இலக்கணத்தின் படி படைக்கப்படுவது மரபுக்கவிதை ஆகும்.

புதுக்கவிதையில். படிம்ம், குறியீடு, இருண்மை,தொன்ம ம் முதலான உத்திகள் கையாளப்படுகின்றன.